*1*

# அதிகாரத்துவம் பற்றிப் படிக்க வேண்டியது ஏன்?

இந்தப் பாடத்தை நாம் தொடங்குகையில், ஒரு மன்னிப்பு வேண்டுதல் அவசியமானதாக உள்ளது - இந்த மன்னிப்பு என்பது இன்றைய நாட்களில் பொதுவாக இவ்வார்த்தை பயன்படுத்தப்படுவது போன்று "மன்னிப்பு" இல்லை, ஆனால் அதற்கு மாறாக இது பழங்காலங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது போன்றதாக உள்ளது. "மன்னிப்பு" என்பதற்கான "apology" என்ற ஆங்கில வார்த்தை, *apologia* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, இவ்வார்த்தை தர்க்கரீதியான ஒரு பதில் அல்லது தற்காப்பு என்ற கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

இந்தப் பாடத்தொடர், தேவன் தமது புதிய உடன்படிக்கையின் சமூகமான சபையானது, அவரை ஆராதிப்பதில் வாய்ப்பாட்டை (இசைக்கருவிகளின் துணையின்றி பாடுதலை) விரும்புகிறார் என்ற கண்ணோட்டத்திற்கு ஒரு தற்காப்பாக, அல்லது விளக்கமாக இருக்கும். இது தன்னில்தானே ஒரு *apologia* ஆக இருக்கும். இருப்பினும் அந்த தற்காப்பைத் தொடங்குவதற்கு முன்னர், வேறுவகையான *apologia* அவசியமானதாக உள்ளது. குறிப்பாக இந்த அறிமுகப் பாடத்தில் நான், அதிகாரத்துவத்தின் பாடக்கருத்தைப் பற்றிப் படிக்க இவ்வளவு அதிக நேரம் செலவிடுதல் முக்கியமாக இருப்பது ஏன் என்று விளக்கம்தர விரும்புகிறேன். கவனம் தேவைப்படுகிற மற்ற பல பாடத்தலைப்புகள் இருக்க, இதற்கு ஏன் நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும்?

## அதிகாரத்துவமானது நமது ஆராதனையுடன் நேரடியாகத் தொடர்புடையது

இந்தப் பாடக்கருத்து தேவனை ஆராதித்தல் என்ற, வேதாகமம் மாபெரும் அக்கறை கொண்டுள்ள விஷயத்துடன் தொடர்புடையதாக இருப்பதால், கிறிஸ்தவர்கள் இதைப் படித்தாக வேண்டும். ஆராதனை என்பது தேவனுடைய மக்களுக்கு அடிப்படையானதாக உள்ளது. ஆராதனையில் நாம் தேவன்மீதும் அவர் நம்மீது பொழிகிற ஆசீர்வாதங்களுக்கான நமது நன்றி உணர்வு மீதும் மிகவும் கவனம் குவிக்கிறோம். மேலும், நாம் ஆராதிக்கும்போது, அந்த நன்றி உணர்விற்கான நமது வெளிப்பாட்டைப் பகிர்ந்துகொள்ளும் மக்களாக ஒன்றுகூடி வருகிறோம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் "நாம் ஒன்றுகூடிச் செய்யும் மிகமுக்கியமான விஷயமான" ஆராதனையில், தேவனை நாம் அணுகும் முறைகளில் நாம் வேறுபட்டால், நாம் அந்த நடவடிக்கையில் முற்றிலும் பகிர்ந்து கொள்ள இயலாது மற்றும் ஊழியத்தின் பகுதிகளில் நம்மை ஒன்றுகூடி ஊழியம் செய்யவும் ஒன்றாக வாழவும் வைக்கக்கூடிய இணைப்புகளை நாம் மேம்படுத்திக்கொள்ளவும் இயலாது. இப்படிப்பட்ட பிரிவினையானது

*சபையின் ஊழியத்தின்மீது எதிர்மறை செயல்தாக்கம் கொண்டுள்ளது (காண்க யோவான் 17:20, 21).*

*இருப்பினும் நாம், பிரிவினையின் இந்த உதாரணமானது உண்மையான ஆராதனையின் இயல்பைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளும் வேறுபட்ட வகைகளில் தனது வேர்களைக் கொண்டுள்ளது என்பதை உற்றுநோக்க வேண்டும். தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நாம் எவ்வாறு ஆராதிப்போம்? ஆராதனையில் விதிமுறை முக்கியமானதாக உள்ளதா? - நாம் பயன்படுத்தும் இசையின் வடிவம்கூட முக்கியமானதாக உள்ளதா? தேவனை ஆராதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மிகத் துல்லியமான விதிமுறை அமைப்பைக் காட்டிலும் ஆராதனையில் உள்ள நமது நோக்கம் பற்றித் தேவன் அதிக அக்கறை கொண்டுள்ளாரா? இவைகள் நமது பாடக்கருத்து தொடர்பான கேள்விகளின் மத்தியில் உள்ளன.*

*"விதிமுறை மற்றும் நோக்கம் ஆகிய இரண்டையும்பற்றி நாம் படிக்க வேண்டுமா?" என்று கேட்டலானது ஒரு ஏற்புடைய கேள்வியை எழுப்புகிறது. நோக்கம் முக்கியமானதாக உள்ளது; உண்மைத் தன்மை பற்றிய அக்கறையின்றி குறிப்பிடப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஆராதித்தமைக்காக மக்களை வேதவாக்கியங்கள் கண்டனம் செய்கின்றன. (காண்க - ஆமோஸ் 5:21-24.) இன்னொரு புறத்தில், உண்மையற்ற இந்த மக்கள் கடைப்பிடித்த ஆராதனையின் விதிமுறைகள் தேவனால் பரிந்துரைக்கப்பட்டவையாக இருந்தன. ஆராதனையைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்று ஆய்வு செய்து பாருங்கள், அப்போது நீங்கள், ஆராதனையில் தேவன் எதிர்பார்க்கும் விதிமுறை பற்றி அவரே குறிப்பிடும் நீண்ட வரலாறு ஒன்றைக் கொண்டுள்ளார் என்று கண்டறிவீர்கள்.*

*தேவன் நோக்கம் நிறைந்த ஜீவியாக இருப்பதால், அவர் தமது மக்கள் ஒரு வகையில் ஆராதிக்க வேண்டும் என்றும் வேறொரு வகையில் ஆராதிக்கக் கூடாது என்றும் கட்டளையிடுவதற்கு நல்ல காரணம் ஒன்றை அவர் கொண்டிருக்க வேண்டும். ஆகவே, ஆராதனையின் விதிமுறையானது நோக்கம் பற்றிய அக்கறையின்றி ஒருக்காலும் பின்பற்றப்படக் கூடாது என்றிருக்கையில், ஆராதனையின் விதிமுறை அல்லது வடிவமைப்பு என்பது முக்கியத்துவம் அற்றது என்று கூறுதல் சரியற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்கள், தேவன் நமக்குக் கொடுத்துள்ள கட்டளைகளுக்கான அவருடைய காரணங்களைத் தீர்மானிக்க இயலாதவர்களாக இருக்கலாம். அவர் சிலகட்டளைகளுக்கான குறிப்பிட்ட காரணங்களை வெளிப்படுத்துதலைத் தேர்ந்துகொள்ளாதிருக்கிறார். உபாகமம் 29:29ம் வசனமானது, "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" என்று கூறுகிறது. தேவனுடைய நினைவுகளும் வழிகளும் நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதற்கு அப்பால் உள்ளன. ஏசாயா 55:8, 9ம் வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன,*

> *என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும்*

*என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.*

தேவனுடைய குறிப்பிட்ட காரணங்களை நாம் புரிந்து கொண்டாலும் இல்லை என்றாலும், அவர் கூறியுள்ளவற்றை ஏற்றுக்கொள்ள நாம் மனவிருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். அவரது பண்பு உண்மையானதாக உள்ளது மற்றும் நாம் அவருடைய விருப்பங்களுக்குக் கீழ்ப்படிந்தால் சிறப்பானவர்களாக இருப்போம்.

தேவன் நமக்கு வெளிப்படுத்தப் பல விஷயங்களைத் தேர்ந்து *கொண்டிருக்கிறார்* என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும் (இந்தச் செயல்முறையின் தொகுப்புரை ஒன்றிற்கு 1 கொரிந்தியர் 2:6-13ஐக் காணவும்). ஆவிக்குரிய வளர்ச்சியின் வேறுபட்ட மட்டங்கள், அவர் வெளிப்படுத்தியுள்ளவை என்ன என்பதை நாம் எவ்வளவு புரிந்துகொள்கிறோம் என்பதன் மீது செயல்விளைவு ஏற்படுத்தலாம். அவரைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம் நமது புரிந்து கொள்ளுதலில் வளர முயற்சி மேற்கொள்ளும்படி எதிர்பார்க்கப்படுகிறோம்.[1]

இவ்வாறாக இந்தப் பாடமானது, நாம் தேவனுடைய கட்டளைகளுக்கான காரணங்களை அறிந்து இருக்கிறோமா இல்லையா என்ற பாடத்தைப் போன்றதாகவே உள்ளது. நமது ஆராதனையில் நாம் பயன்படுத்த வேண்டிய விதி முறைகளை நமக்குக் கூறும் அவரது கட்டளைகள் உட்பட, அவரது கட்டளைகள் எதிலும் நாம் ஒருக்காலும் மாற்றம் ஏற்படுத்தவோ அல்லது அவற்றைக் காணாது விட்டு விடவோ கூடாது. *தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மக்கள் தங்கள் ஆராதனையில் பயன்படுத்தக் கூடியது வாய்ப்பாட்டு இசைதான் தேவன் விரும்புகிற வடிவமாக உள்ளது என்ற நிலைப்பாட்டைச் சாட்சியம் ஆதரிக்கிறது என்றால், ஆராதனையை ஏறெடுக்க வேறு எந்த வடிவத்தையும் நாம் பயன்படுத்தலாம் என்று யூகிக்கக் கூடாது.*

## சமீபத்திய ஆண்டுகளில் அதிகாரத்துவம் சிறிதளவு கவனத்தையே பெற்றுள்ளது

சமீபத்திய ஆண்டுகளில் இந்தப் பாடக்கருத்தின்மீது அதிக அளவு கவனம் செலுத்துதல் மீது கவனக்குவிப்பு இருந்ததில்லை என்பது இதைப் படிப்பதற்கான இரண்டாவது காரணமாக உள்ளது.[2] சபை வரலாற்றின் தலைசிறந்த நபர்கள் இந்தப் பாடக்கருத்தை, கிறிஸ்தவ யுகத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் உள்ள அளவில் மாத்திரமல்ல, ஆனால் சீர்திருத்தத்தின் காலத்தில் உள்ள அளவிலும் அடிக்கடி கலந்துரையாடினர். இந்தப் பாடக்கருத்திற்கு, இப்போதைக் காட்டிலும் முன்பு அதிக கவனம் தரப்பட்டது என்பதை இந்தக் குறிப்புகள் காண்பிக்கின்றன.

இது ஏன் உண்மையாக உள்ளது? நமது கவனமானது மற்ற பிரச்சனைகள் மீது திருப்பப்பட்டு உள்ளது என்பதால் மக்கள் அதிகாரத்துவத்தைப் பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டனரா? இந்தப் பாடக் கருத்தின்மீது ஆண்டுகளினூடே தங்கள் உரைகளை ஏற்படுத்திய பல எழுத்தாளர்களின் கருத்துக்களில் கலந்துரையாட மிகச்சிறந்த விஷயம் எதுவும் இல்லை என்று நாம் முடிவு செய்துவிட்டோமா? தற்போதய கவனமின்மையானது மிகத் தீவிரமான

பிரச்சனையைச் சுட்டிக்காட்டுவதாக இருக்குமா? வேதவசனங்களை உண்மைத் தன்மையுடன் படித்தல் என்ற எண்ணப்போக்கின் மீது பலர் மிகவும் கவலையற்றவர்களாக இருக்கக் கூடுமா? கடந்த காலத்தில் இருந்தவர்கள் எப்போதுமே சரியானவர்களாக இருந்தனர் என்று உரிமைகோர நான் துணிய மாட்டேன். அதே வேளையில் நான், இன்றைய நாட்களில் உள்ள நாம், அவர்கள் கூறியது என்ன மற்றும் ஏன் அவ்வாறு கூறினார்கள் என்று கண்ணோக்காமல் கூட, அவர்களின் எழுத்துக்களை நீக்குமளவுக்கு நாம் ஞானமுள்ளவர்களாக இருக்கிறோம் என்று நினைக்க போதிய அளவு துணிவற்றவனாக இருக்கிறேன்.

## ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாடு பற்றிய கேள்வியை அதிகாரத்துவம் அமைவுபெறச் செய்கிறது

நமது நம்பிக்கைகளை நாம் தற்காத்துக் கொள்ளக்கூடியவர்கள் ஆக்குதல் என்பது இந்தப் பாடத்தை மேற்கொள்வதற்கான மூன்றாவது காரணமாக உள்ளது. வாய்ப்பாட்டில் பாடுதலையே தேவன் கட்டளையிட்டுள்ளார் என்று கிறிஸ்துவின் சபையின் உறுப்பினர்கள் நம்புகின்றனர். இப்படிப்பட்ட நிலைப்பாட்டை விளக்குதல் என்பது கண்ணியமானதாக உள்ளது, ஆனால் இதைத் தற்காத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பதற்கு இன்னும் அதிகம் வலிவான தூண்டுதல்கள் உள்ளன: தேவனுடைய மக்கள் விசுவாசிக்கும் விஷயங்களை அவர்கள் ஏன் விசுவாசிக்கின்றனர் என்று அறிந்து கொள்ளும்படி வேதவசனங்கள் கட்டளையிடுகின்றன. பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறிய புத்திமதியை நாம் தீவிரமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்: “உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்” (1 பேதுரு 3:15ஆ).

தேவன் தமது மக்கள் தம்மை ஆராதிப்பதில் வாய்ப்பாட்டு இசையைப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை நாம் நம்புவது ஏன் என்று நாம் காண்பித்தாக வேண்டும் அல்லது இது ஒரு வழக்கமாக அல்லது தேர்ந்துகொள்ளுதலாக மாத்திரமே உள்ளது என்று ஒப்புக்கொண்டாக வேண்டும். இந்த நம்பிக்கைக்குத் திடமான தற்காப்பு வாதம் ஒன்றை நாம் தர முடியாவிட்டால், ஒருமைப்பாட்டிற்காக நாம், இசைக்கருவிகளைப் பயன்படுத்தித் தேவனை ஆராதிப்பவர்களிடத்தில் இருந்து நம்மைப் பிரிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்னொரு புறத்தில், இது தேவன் பொருட்படுத்தக் கூடியதாக உள்ளது என்றால், அந்த சத்தியத்தில் மற்றவர்கள் இணக்கம் கொள்வதற்குச் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நாம் செய்யத் தவறினால், நாம் பொறுப்பற்ற சீஷர்களாக இருப்போம்.

இந்தப் பாடத்தொடரில் நாம், சபையில் இயேசுவின் அதிகாரத்திற்குக் கவனம் கொடுத்து, விசுவாசத்தின் நடைமுறையில் அதிகாரத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிக் கவனம் செலுத்துவோம். ஆராதனை என்பது இயேசுவின் அதிகாரத்துவத்திற்கு இணங்கச் செய்யப்பட வேண்டிய விசுவாசத்தின் செயல் முறையாக உள்ளது.

இந்தத் தற்காப்பு வாதத்தை முன்னிறுத்துவதற்கான தூண்டுதல் நோக்கமானது, தேவனுடைய வசனத்தின்மீதுள்ள அன்பு மற்றும் மக்கள் அவரைப்

*பிரியப்படுத்த வேண்டும் என்பதற்கான விருப்பம் ஆகியவற்றில் இருந்து வளர்ந்துள்ளது. முன்வைக்கப்படும் சாட்சியங்களை நீங்கள், விடுதலையாக்கும் சத்தியத்தை (காண்க யோவான் 8:32) கண்டறியும் அக்கறையுடன் நேர்மை யாக ஆராய்வீர்கள் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன் பெரேயா நகரில் இருந்தவர்களின் உதாரணத்தைப் பின்பற்றும்படியும் (நடபடிகள் 17:10, 11) நீங்களே வேதவசனங்களை ஆராய்ச்சி செய்யும்படியும் நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.*

---

குறிப்புகள்

[1]*வளர்ச்சி மற்றும் போதனை ஆகியவை எபேசியர் 4:11-16; கொலோசெயர் 1:28, 29; எபிரெயர் 5:11-14 மற்றும் 2 பேதுரு 3:18 ஆகிய வசனப்பகுதிகளில் வலியுறுத்தப்பட்டுள்ளன.* [2]*பிரதானமான நாமகரணக்கூட்டங்களில் உள்ள ஒரு சிலர், அதிகாரத்துவம் பற்றிய பாடக்கருத்து மீதான தங்கள் போதனையைப் பற்றித் திரும்பச் சிந்திக்கின்றனர். உதாரணமாக, வடக்கு அமெரிக்க நாட்டில் சீர்திருத்த பிரிஸ்பிட்டேரியன் சபையின் வலைத்தளப் பக்கத்தைக் காணுங்கள். அவர்களின் வலைத்தளத்தில் உள்ள "நம்பிக்கைகள்" என்ற தலைப்பிலான பக்கமானது பின்வரும் கூற்றை ஏற்படுத்துகிறது: "தேவன் எவ்வாறு ஆராதிக்கப்படவேண்டும் என்று தேவனுடைய வசனங்கள் தெளிவாகக் கருத்துக்களை முன்வைத்துள்ளன" என்று நாங்கள் நம்புகிறோம். தேவனு டைய வசனத்தை வாசித்து விளக்கம் தருதல் என்பது நமது ஆராதனையில் மை யக் கவனக்குவிப்பாக உள்ளது. நமது இசைத் துதியானது தேவனுடைய வசனத்தை மாத்திரமே பயன்படுத்துகிறது, இவ்வாறாக அது வேதாகமத்தில் உள்ள சங்கீதங்கள் என்ற தேவனால் ஏவப்பட்ட புத்தகத்தைப் பயன்படுத்துகிறது. இருதயப் பூர்வமான ஆராதனைக்கான புதிய ஏற்பாட்டு சபையின் கட்டளைகளைக் காத்துக்கொள்வதில், நாம் இசைக்கருவிகளின் துணையின்றி பாடுகிறோம்* (http://www.reformedpresbyterian.org/conv_beliefs.html; Internet; accessed 26 July 2004).